பாடம் 1 டிசம்பர் 27–ஜனவரி 3



# துன்பப்பட்டும் கைவிடப்படுகிறதில்லை

ஓய்வுநாள் பிற்பகல்

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** எபே 3:1; 2கொரி 4:7–12; அப் 9:16; பிலே 15,16; கொலோ 4:9; பிலி. 1:1–3; கொலோ 1:1,2.

**மனன வசனம்:** கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்; சந்தோஷமாயிருங்கள் என்று மறுபடியும் சொல்லுகிறேன். பிலிப்பியர் 4:4.

பொய்க்குற்றச்சாட்டிற்கு ஆளான ஒரு அட்வென்டிஸ்ட் போதகர், கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகள் சிறைச்சாலையில் கழித்தார். முதலில் குழப்பமாக இருந்தாலும், சிறைச்சாலைதான் தேவன் தனக்குக் கொடுத்துள்ள ஊழியக்களம் என்பதைப் புரிந்துகொண்டார். அவர் ஒரு போதகர் என்பதை அங்கிருந்த கைதிகள் அறிந்தபோது, தங்களுக்குப் பிரசங்கம்பண்ணும்படி அவரிடம் கேட்டார்கள். பிரசங்கித்தார், கிறிஸ்தவப் புத்தகங்களைக் கொடுத்தார். கைதிகளுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, திருவிருந்து ஆராதனைகளை நடத்தினார்.

“சிறைச்சாலையில் ஊழியம் செய்வது சில சமயங்களில் கடினமாக இருந்தது. ஆனால், ஜெபத்திற்குப் பதில் கிடைப்பதையும், வாழ்க்கைகள் மாறுவதையும் கண்டபோது மகிழ்ச்சியாக இருந்தது” என்கிறார்.

பிலிப்பியர், கொலோசெயர் நிருபங்களை பவுல் சிறைச்சாலையில் இருந்துதான் எழுதினார். பிலி 1:7; கொலோ 4:3. பொய்க்குற்றச்சாட்டின் பேரில் பவுலும் சீலாவும் பிலிப்பி சிறைச்சாலையில் இருந்தபோது, சிறைச்சாலைக்காரன் ‘அவர்கள் கால்களைத் தொழுமரத்தில் மாட்டிவைத்தான்.’ அப் 16:24. நடுராத்திரியில் அவர்கள் ‘தேவனைத் துதித்துப் பாடினார்கள்; காவலில் வைக்கப்பட்டவர்கள் அதைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள்.’ அப் 16:25. எப்பொழுதும் சந்தோஷமாக இருக்கவேண்டியது எப்படி என்பதை உண்மையிலேயே அறிந்திருந்தார்கள்.

பவுல் சந்தித்த சூழ்நிலைகளை இந்த வாரத்தில் பார்ப்போம். தனக்கு நேர்ந்தவைகளுக்கு பின்னால் மிகப்பெரிய நோக்கம் இருந்ததைக் கண்டார். நாமும்கூட பாடுகளைச் சந்திக்கும்போது, அவரிடமிருந்து கற்றுக்கொள்ளலாம்.

*2026, ஜனவரி 3 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

# கிறிஸ்துவினிமித்தம் கைதியாக இருந்த பவுல்

பிலிப்பியரும் கொலோசெயரும் சிறைச்சாலை நிருபங்கள் எனப்படுகின்றன; ஏனென்றால் பவுல் சிறைச்சாலையில் இருந்தபோது, அவை எழுதப்பட்டன. எபேசியரும் பிலேமோனும் அப்படியே. அவை சுமார் கி.பி. 60-62இல் பவுல் ரோமில் இருந்தபோது, எழுதப்பட்டிருக்கலாம் என்று பல விளக்கவுரையாளர்கள் கருதுகிறார்கள்.

**தன் சிறையிருப்பை பவுல் சித்திரிக்கிற விதத்திலுள்ள முக்கியத்துவம் என்ன? எபே 3:1; பிலே 1.**

இயேசு கிறிஸ்துவின் சேவைக்கு பவுல் தன் வாழ்க்கையை அர்ப்பணித்திருந்தார். அதில் சிறைச்சாலையும் ஓர் அங்கம் என்றால், அதற்கும் ஆயத்தமாக இருந்தார். பவுல் தன்னை 'சங்கிலியால் கட்டப்பட்டிருக்கிற ஸ்தானாபதி' என்கிறார். எபே 6:20. அவர் ஊழியப் பயணங்கள் சென்றார்; சபைகளை ஸ்தாபித்தார்; கர்த்தருக்காக ஊழியம்செய்ய பயிற்சியளித்தார். 'இந்தக் கட்டுகள்மட்டும் இல்லையென்றால், நாம் அதிகம் சாதித்திருப்பேனே?' என்று அவர் கேட்டிருக்கலாம். இன்னொருமுறை அவர் சிறையில் அடைக்கப்பட்ட சமயத்தில் 2தீமோத்தேயுவை எழுதினார்; இது ஆவிக்குரிய வழிகாட்டல் நிருபம் என்று அழைக்கப்படுகிறது. எனவே புதிய ஏற்பாட்டில் குறைந்தபட்சம் ஐந்து நிருபங்களையாவது சிறைச்சாலையில் இருந்தபோதுதான், அவர் எழுதியிருக்கவேண்டும்.

தான் சிறையில் அடைக்கப்பட்டிருந்த இடம்பற்றி தன் நிருபம் எதிலும் பவுல் குறிப்பிடவில்லை; ஆனால் எபேசு அல்லது சிசெரியாவில் சிறையில் இருந்திருக்கலாமென சிலர் கூறுகிறார்கள். ஆனால் அவர் எபேசுவில் சிறையில் அடைக்கப்பட்டதாக வேதாகம ஆதாரம் இல்லை. சிசெரியாவில் பவுலின் உயிருக்கு அச்சுறுத்தல் இவில்லை, எனவே அங்குதான் அவர் அடைக்கப்பட்டிருக்கவேண்டும் என்று தோன்றலாம். ஆனாலும், பிலிப்பியர் நிருபம் எழுதப்பட்ட சமயத்தில், அங்கு அவருக்கு அச்சுறுத்தல் இருந்தது. பிலி 1:20; 2:17.

பவுல் சிறைவைக்கப்பட்டிருந்த இடத்தை அறிந்துகொள்ள இந்த நிருபத்தில் சில குறிப்புகள் உள்ளன. முதலாவது, ரோம ஆளுனரின் குடியிருப்பில் இருந்தார்; அது ஆளுனரின் அலுவலகமாகவும் இருந்திருக்கலாம்; அப்படியொரு இடத்தில்தான் எருசலேமில் இயேசுவை பிலாத்து விசாரித்தார். மத் 27:27; யோவான் 18:33. தான் சிறையிருந்த இடம் என்னவென்று அல்ல, அந்த இடத்தில் இருந்தவர்கள் யாரென்று பவுல் கூறுகிறார். அதாவது, 'அரமனையெங்குமுள்ளவர்கள்' சுவிசேஷத்தை அறிந்துகொண்டதாகக் கூறுகிறார். பிலி 1:13. பேரரசனையும் சிறைக்கைதிகளையும் பாதுகாக்க ரோமில் சுமார் பதினான்காயிரம் சிறப்புப்படை வீரர்கள் இருந்தார்கள்.

இரண்டாவது, 'இராயனுடைய அரமனையில்' இருந்தும் பவுல் வாழ்த்து தலை அனுப்புகிறார். பிலி 4:22. எனவே, ரோமில் சிறைக்கைதியாக, அரசக் குடும்பத்தினருக்குச் சேவைசெய்தவர்களுடன் பவுல் தொடர்பில் இருந்திருக்க வேண்டும் என்பது தெரிகிறது.

---

**நாம் எப்படிப்பட்ட கடினமான சூழ்நிலையில் இருந்தாலும், அதை அதிக பயனுள்ளதாக்க என்ன செய்யலாம்? அவ்வாறு செய்வது ஏன் எப்போதும் எளிதல்ல?**

# காவலிலிருந்த பவுல்

மக்கெதோனியாவில் இருந்தபோது, தான் பல்வேறு சமயங்களில் சிறைவாசம் அனுபவித்ததாக பவுல் குறிப்பிடுகிறார். 2கொரி 6:5; 2கொரி 11:23; 2கொரி 7:5. பதிவுசெய்யப்பட்ட முதல் அனுபவம் பிலிப்பியில் நடந்தது. அப் 16:16-24. பிறகு எருசலேமில், அவர் சிசெரியா சிறைக்கு மாற்றப்படுவதற்குமுன் சில காலம் சிறையில் வைக்கப்பட்டார்.

தன் 'கட்டப்பட்ட' நிலைகுறித்து வேறு இடங்களிலும் பவுல் குறிப்பிடுகிறார். பிலே 10,13. ரோமில் வீட்டுச்சிறையில் இருந்தாலும், ஒரு சிறப்பு ரோம வீரனால் கட்டப்பட்டிருந்தார். இதேபோல் கட்டப்பட்டிருந்த இரண்டாம் நூற்றாண்டு கிறிஸ்தவரான இக்னாசியஸ், வீரர்களின் நடத்தைப்பற்றி, 'காட்டு விலங்குகள் போல நடந்துகொண்டார்கள். அவர்களை நாம் நன்றாக நடத்தினாலும், நம்மிடம் மோசமாகத்தான் நடப்பார்கள்' என்கிறார்.[1]

**தான் சந்தித்த பாடுகளைச் சகிப்பதற்கு எது பவுலுக்கு உதவியதாக 2கொரி 4:7-12 கூறுகிறது? அவரது வாழ்வின் நோக்கம் என்னவாக இருந்தது?**

---

வாழ்க்கை எவ்வளவு மோசமானாலும், பவுலால் ஒரு பிரகாசமான பக்கத்தைப் பார்க்கமுடிந்தது, அதுதான் மனஅழுத்தத்தைச் சகிக்க அவருக்குப் பெலன் தந்தது. சாத்தான் தன்னால் முடிந்த எல்லாக் கஷ்டங்களையும் பவுல்மேல் எறிந்தாலும், தான் கைவிடப்படவில்லை என்பது பவுலுக்குத் தெரியும்.

**இந்தக் கஷ்டங்களை எதிர்கொள்வதற்கு உதவியாக பவுல் பெற்றிருந்த ஆவிக்குரிய வளங்கள் என்ன? 2கொரி 6:3-7.**

---

பெரும்பாலும் நம் சூழ்நிலைகள், பெலவீனங்கள், நம் கடந்தகால தோல்விகள் ஆகியவற்றைப் பார்த்து அதைரியமடைகிறோம். ஆனால் அப்படிப்பட்ட நேரங்களில்தான், தீமையுடன் போராடுவதற்கு தேவன் நமக்குச் செய்துள்ள அற்புத ஏற்பாடுகளை யோசிக்கவேண்டும். அவற்றில் மிகமுக்கியமான ஒன்று வேதாகமம், அதாவது 'சத்திய வார்த்தை'. ஏனென்றால், மற்றவர்களுடைய தவறுகளிலிருந்தும், அவர்கள் வெற்றிபெற்ற விதங்களிலிருந்தும் நாம் கற்றுக்கொள்ளலாம். மேலும், உலக மீட்பர் நமக்காகச் செய்தவற்றை பரிசுத்த ஆவியானவர்தாம் பயனுள்ளதாக்குகிறார். ஆவியானவர்தாம் நம் இருதயத்தைச் சுத்தமாக்குகிறார். ஆவியானவர் மூலமாகத்தான் விசுவாசி தெய்வீக சுபாவத்தில் பங்கெடுக்க முடிகிறது. பெற்றதும் கற்றதுமான அனைத்து தீய இயல்புகளையும் மேற்கொள்ளவும், தம் சொந்தக் குணத்தை திருச்சபையில் பதியச்செய்யவும் உதவுகிற ஒரு தெய்வீக வல்லமையாக ஆவியானவரை கிறிஸ்து நமக்குக் கொடுத்திருக்கிறார்.

[1] Michael W. Holmes, ed., The Apostolic Fathers (Grand Rapids, MI: Baker Academic, 2007), p. 231.

---

**நாம் சுயாதீன ஊழியரோ, போதகரோ, எப்போதும் நம்மை 'தேவஊழியக்காரராக விளங்கப்பண்ணுவதற்கு' என்ன செய்யலாம்? 2கொரி 6:4. அதன் அர்த்தம் என்ன?**

# பிலிப்பியில் பவுல்

இரண்டாவது ஊழியப்பயணத்தின்போது, ஊழியக்குழுவில் தீமோத்தேயு சேர்ந்த சில நாட்களில் அவர்கள் ஆசிய மைனர் பகுதிக்குச் செல்வதை ஆவியானவர் தடைபண்ணினார். அப் 16:6. 'நீர் மக்கெதோனியாவுக்கு வந்து எங்களுக்கு உதவிசெய்ய வேண்டும்' என்று இரவு தரிசனத்தில் ஒருவன் தன்னிடம் வேண்டிக்கொண்டதை பவுல் கண்டார். அப் 16:9. உடனடியாக மக்கெதோனியாவுக்குப் புறப்பட்டார்கள். துரோவாவிலிருந்து ஏஜியன் கடல் மார்க்கமாக ஐரோப்பிய கண்டத்திலிருந்த நெயாப்போலிக்குப் பயணம் செய்கிறார்கள். அங்கே சுவிசேஷம் சொல்லாமல் பவுலும் சீலாவும் தீமோத்தேயுவும் துரோவாவில் அவர்களுடன் இணைந்த லூக்காவும் பிலிப்பிக்குப் புறப்பட்டார்கள். (10ஆம் வசனத்தில் 'நாங்கள்' என்று குறிப்பிடுகிறார்.)

சுவிசேஷ ஊழியத்தில் பவுல் எப்போதும் வியூகம் அமைப்பார். பிலிப்பி பட்டணம் 'மக்கெதோனியா தேசத்து நாடுகளில் ஒன்றிற்குத் தலைமையானது.' அப் 16:12. அது ரோம சாம்ராஜ்யத்தின் புகழ்பெற்ற பட்டணங்களில் ஒன்று; அது **லஸ் இட்டாலிகம்** என்கிற அந்தஸ்தைப் பெற்ற பட்டணம்; லஸ் இட்டாலிகம் என்பது வெளிநாட்டிலிருந்த சில பட்டணங்களுக்கு வழங்கப்பட்ட ஒரு விருது. இத்தாலிப் பட்டணங்களின் சலுகைகளை லஸ் இட்டாலிக குடிமக்களும் பெற்றிருந்தார்கள்; அதாவது, நில வரி, உள்ளூர் வரி போன்றவற்றில் விலக்கு உண்டு, மேலும், அங்கு பிறந்தாலே ரோமக் குடிமகனாகிவிடலாம். கிழக்குப் பகுதியுடன் ரோமை இணைக்கிற முக்கிய தரைவழி சாலையான 'வியா எக்னா ஷியா' சாலையில், இது ஒரு முக்கியமான நிறுத்தமாகவும் இருந்தது. அங்கு கிறிஸ்தவத்தை அறிமுகம்செய்த செயலானது அம்பிபோலி, அப்பொலோனியா, தெசலோனிக்கே, பெரோயா போன்ற பட்டணங்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்க உதவியது.

மேலும் முதல் நூற்றாண்டு பிலிப்பி பட்டணத்தின் அதிகாரப்பூர்வ மொழி லத்தீன், அங்குள்ள லத்தீன் கல்வெட்டுகள் அதற்கு சாட்சி. பிலிப்பியர் 4:15இல், 'பிலிப்பியரே' என்று வருகிற சொல் லத்தீன் மொழி நடையில் உள்ளது; அவர்களது சிறப்பு ரோம அந்தஸ்தின் அடிப்படையில், இப்படிப் பேசியிருக்கலாம். ஆனாலும் சந்தைப்பகுதிகளிலும், சுற்றிலுமிருந்த பட்டணங்களிலும் கிரேக்க மொழிதான் பேசப்பட்டது; சுவிசேஷமும் கிரேக்கமொழியில்தான் அறிவிக்கப்பட்டது. பவுல் குழுவினரோடு ஜெபிப்பதற்காக நதியோரத்தில் மக்கள் கூடினார்கள்; அங்குதான் லீதியாளும் அவளது குடுபம்பத்தாரும் இயேசுவை ஏற்றுக்கொண்டார்கள். அப் 16:13-15. அவள் இரத்தாம்பரம் விற்ற ஒரு தொழிலதிபர். எனவே பிலிப்பியில் பவுலின் ஊழியத்திற்கு பண உதவி செய்தவர்களில் லீதியாளும் இருந்திருக்கலாம். பவுலும் சீலாவும் அங்குச்சிறையில் அடைக்கப்பட்டபோது, சிறைச்சாலைக்காரனும் அவனது குடும்பத்தார் அனைவரும் மனம்மாறினார்கள்.

ஐரோப்பாவில் உபத்திரவங்கள் ஏற்படவிருந்தாலும்கூட, அங்கே சுவிசேஷம் பரவுவதற்கான முக்கிய இடமாக பிலிப்பி இருந்ததை ஆவியானவர் அறிந்திருந்தார். உபத்திரவம் பெரிய தீமையாக இருந்தாலும், வேறு வழிகளில் சந்திக்க முடியாத மக்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்க அது உதவுகிறது.

---

**பவுலின் பாடுகள் சிலவற்றைப் புரிந்துகொள்ள அப் 9:16 எவ்வாறு உதவுகிறது? நம் பாடுகள் சிலவற்றைப் புரிந்துகொள்ளவும், இது எவ்வாறு உதவலாம்?**

# பவுலும் கொலோசெயும்

பவுல் கொலோசெ பட்டணத்திற்குச் சென்றதாகப் பதிவு இல்லை; இங்கும் பவுலின் ஊழிய வியூகம் வெளிப்படுகிறது. முதலில், கொலோசெ பட்டணத்தைச் சேர்ந்த எப்பாப்பிரா என்பவர்தான், அப்பட்டணத்திற்கு சுவிசேஷத்தைக் கொண்டுசென்றார். கொலோ 4:12; 1:7. அவர் எப்படி மனமாறினார்? முதல் நூற்றாண்டின் பாதியில், பவுல் அருகிலிருந்த எபேசுவில் ஊழியம் செய்தபோது, 'ஆசியாவில் குடியிருந்த ... எல்லாரும் கர்த்தராகிய இயேசுவின் வசனத்தைக் கேட்டார்கள்' அப் 19:10; ஒப்பிடவும் அப் 20:31. அப்போது அவர் மனமாறியிருக்கலாம்.

அந்தப் பகுதி முழுவதிலும் சுவிசேஷம் எவ்வளவு அதிகமாகப் பரவியது என்பதை வெளிப்படுத்தல் புத்தகம் சாட்சியிடுகிறது. வெளி 1:4. கொலோசெவுக்கு சுவிசேஷம் எப்படிச் சென்றிருக்கும்? பவுல் ஊழியத்தால் எபேசுவில் மனமாற்றமடைந்தவர்கள் அறிவித்திருக்கவேண்டும். எபேசுவில் பவுலின் போதனையைக் கேட்ட எப்பாப்பிராவும் பவுலின் உடன் ஊழியர் ஆனார்; எப்பாப்பிரா தன் சொந்த ஊரான கொலோசெவுக்கு சுவிசேஷத்தைக் கொண்டு சென்றார்.

லவோதிக்கேயாவுக்கு தென்கிழக்கில் சுமார் 15 கி.மீ. தூரத்தில் கொலோசெ இருந்தது; இப்போதுதான் அங்கு அகழ்வாராய்ச்சி நடந்து வருகிறது; எனவே, அப்பகுதியின் மிகமுக்கிய நகரங்களுடன் ஒப்பிடும்போது அந்நகரம்பற்றி குறைவான விபரங்களே உள்ளன. ஆனால் அங்கு குறிப்பிடத்தக்க அளவில் யூதர்கள் இருந்திருக்கவேண்டும். 'பிரிஜா பகுதியில் கிட்டத்த பத்தாயிரம் யூதர்கள் வாழ்கிறார்கள்' என்று ஆர்தர் ஜி. பேட்சியா குறிப்பிடுகிறார். பல ரோமப் பட்டணங்களைப்போல கொலோசெயிலும் மக்கள் பல்வேறு தெய்வங்களை வணங்கியதை கொலோசெ நாணயங்கள் காட்டுகின்றன. அஞ்ஞானப் பழக்கங்களும், தீவிரக் கலாச்சாரத் தாக்கங்களும் அங்கிருந்த கிறிஸ்தவர்களுக்கு கடும் நெருக்கடிகளை ஏற்படுத்தியிருக்கவேண்டும், சுவிசேஷத்தை அறிவிப்பதில் மட்டுமல்ல, சுவிசேஷத்திற்கு உண்மையாக இருப்பதற்கும் அங்கு பெரும் சவால்களைச் சந்தித்திருக்கலாம். கொலோசெயிலிருந்த மற்றொரு முக்கியக் கிறிஸ்தவர் பிலேமோன்; அவரும் எப்பாப்பிரா மனமாற்றமடைந்த நேரத்தில்தான் இயேசுவை ஏற்றுக்கொண்டிருக்கவேண்டும்.

**ஓநேசிமுவுடன் எப்படிப்பட்ட போக்கைக் கடைப்பிடிக்க பிலேமோனிடம் பவுல் அன்புடன் கேட்டுக்கொண்டார்? பிலே 15,16; கொலோ 4:9.**

ரோமச்சட்டத்தின்படி ஓநேசிமுவை பிலேமோனிடம் பவுல் திருப்ப அனுப்ப வேண்டியிருந்தது; ஆனாலும் ஒரு சகவிசுவாசியின் பரிவோடும் மனசாட்சியோடும் ஓநேசிமுவை ஒரு அடிமையாக அல்ல, ஒரு சகோதரனாக நடத்தும்படி பிலேமோனிடம் வேண்டுகிறார். பிலே 16.

**அடிமைமுறையை இன்று நாம் வெறுக்கலாம், பவுல் அதைக் கண்டித்திருந்தால், நன்றாக இருக்குமென நினைக்கலாம்; ஆனால் பவுல் அங்குச் சொல்வதை நாம் புரிந்துகொள்ள என்ன செய்யலாம்?**

---

**தப்பின அடிமைகளைத் திரும்ப அனுப்பவேண்டும் என்கிற ஒரு சட்டம் அமெரிக்காவில் அடிமைமுறைமை இருந்த சமயத்தில் இயற்றப்பட்டது; அட் வென்டிஸ்டுகள் இந்தச் சட்டத்திற்குக் கீழ்ப்படியக்கூடாது என்று எலன் ஒய்ட் சொன்னார். ஏன்?**

# பிலிப்பி, கொலோசெ சபைகள்

**பிலிப்பி, கொலோசெ சபை விசுவாசிகளை பவுல் எவ்வாறு அழைக்கிறார்? அதிலுள்ள முக்கியத்துவம் என்ன? பிலி 1:1-3; கொலோ 1:1,2.**

---

பவுல் தன் நிருபங்களில், தன் வழக்கமான பாணியில் அந்த இடங்களிலுள்ள கிறிஸ்தவர்களை 'பரிசுத்தவான்கள்' என்று வாழ்த்துகிறார்; அதாவது, ஞானஸ்நானத்தின் மூலம் தேவனுடைய விசேஷித்த மக்களாக அவர்கள் பிரித்தெடுக்கப்பட்டார்கள்; இஸ்ரவேல் மக்களும்கூட விருத்தசேதன சடங்கின்மூலம் 'பரிசுத்த ஜாதியாக' பிரித்தெடுக்கப்பட்டார்கள். யாத் 19:5,6; 1பேதுரு 2:9,10. ரோமச் சபை சிலரைப் 'பரிசுத்தர்கள்' என்று அழைப்பதற்கும் இதற்கும் சம்பந்தமில்லை.

இந்த இரண்டு நிருபங்களின் வாழ்த்துதல்களில் உள்ள ஒற்றுமைகளைக் கவனிக்கவேண்டும். பவுல் பிலிப்பியின் 'கண்காணிகளையும், உதவிக்காரரையும்' குறிப்பிடுகிறார்; அதேசயம் கொலோசெயில் 'விசுவாசிகளுமாயிருக்கிற சகோதரர்களைக்' குறிப்பிடுகிறார். கொலோ 1:2. திருச்சபையில் விசேஷித்த ஊழியத்தைச் செய்தவர்களை புதிய ஏற்பாடு 'விசுவாசமுள்ள சகோதரர்கள்' என்று குறிப்பிடுகிறது. எபே 6:21; கொலோ 4:7; 1பேதுரு 5:12. எனவே அந்தப் பட்டணங்களிலிருந்த திருச்சபை அங்கத்தினர்களிடம் மட்டுமல்ல, திருச்சபை தலைவர்களிடமும் பவுல் பேசுகிறார். வேதாகமத்தின் பிற இடங்களிலும் சிறப்பு ஊழியங்கள்பற்றிக் குறிப்பிடப்படுகின்றன. 1தீமோ 3:1-12; தீத்து 1:5-9. எனவே, திருச்சபையின் ஆரம்பம்முதலே சபை ஒரு அமைப்பாக இருந்ததும், அதன் முக்கியத்துவமும் புரிகிறது.

தீமோத்தேயு, எப்பாப்பிரா போன்ற உடன் ஊழியர்களுக்குப் பயிற்சியளிக்கவும், உள்ளூர் திருச்சபைகளில் தலைவர்களை நியமிக்கவும் பவுல் முன்னுரிமையளித்தார்; அது அவரது சுவிசேஷ ஊழிய முயற்சிகளுக்கு உதவியாக இருந்தது. அதாவது, சுவிசேஷத்தை அறிவிப்பதற்காகவும் அங்கத்தினர்களைத் தக்கவைப்பதற்காகவும் வியூகம் அமைத்தார். 1850களில் அட்வெண்டிஸ்ட் ரிவ்யூ சேபத் ஹெரால்டுகளில் வெளிவந்த பல கட்டுரைகள் காட்டுவதுபோல, புதிய ஏற்பாட்டு சபை அமைப்பு மாதிரியை நம் அட்வெண்டிஸ்ட் முன்னோடிகள் பின்பற்றினார்கள். ஜேம்ஸ் ஒய்ட் இவ்வாறு சொல்கிறார்: கிறிஸ்துவின் சபையை ஒழுங்கமைக்க புதிய ஏற்பாட்டின் தெய்வீக ஒழுங்கு போதுமானது. அதற்கும் அதிகமாகத் தேவைப்பட்டிருந்தால், ஆவியானவரின் ஏவுதலால் அது கொடுக்கப்பட்டிருக்கும். பவுல் அந்தச் சபைகளுக்கு நிருபங்களை எழுதுவதற்கு வெகு நாட்களுக்கு முன்னரே, எருசலேம் திருச்சபைக்கு அலுவலர்களை நியமிக்கிற வேலையை அப்போஸ்தலர்கள் தொடங்கினார்கள். அப் 6:1-6; 11:30. சத்திய தூதுவர்கள் எல்லா இடங்களிலும் சுவிசேஷத்தை அறிவித்து, திருச்சபைகள் அமைப்பதற்கு இது ஒரு மாதிரியாகச் செயல்பட இருந்தது.

பவுல் தன் நிருபங்களை எழுதினபோது, எழுத்து உதவியாளர்களைப் பயன்படுத்தியது நன்கு அறியப்பட்ட உண்மை. பவுலுடன் தீமோத்தேயுவும் சத்தியத்தை அறிவித்து வந்ததாகச் சொல்லப்படுகிறது. 2கொரி 1:1; பிலே 1. தன் நிருபங்களில் 'நாங்கள்' என்றல்ல, 'நான்' என்று பவுல் பேசுவது, அந்த நிருபங்களை எழுதியவர் அவரே என்பதைக் காட்டுகிறது.

# மேலும் படிக்க:

'ஆவியானவரின் பரிசுத்தமாக்கப்படுதலாலும், சத்தியம்மீதான விசுவாசத்தாலும் கிடைக்கிற இரட்சிப்புக்கு தேவன் உங்களைத் தெரிந்துகொண்டுள்ளார். அதனால் தரித்து நில்லுங்கள். நீங்கள் உண்மையுடன் தேவனைச் சேவிக்கும்போது, தப்பெண்ணத்திற்கும் எதிர்ப்புக்கும் ஆளாகலாம்; ஆனால் அநியாயமாக உபத்திரவப்படுத்தப்படும்போது, கோபங் கொள்ளாதீர்கள். திரும்பத் தாக்காதீர்கள். இயேசு கிறிஸ்துவுக்குள் நல்நடத்தையைக் காத்துக்கொள்ளுங்கள். பரலோகத்திற்கு நேராக உங்கள் முகத்தை கற்பாறைபோலாக்குங்கள். மற்றவர்கள் தங்கள் விருப்பப்படி பேசட்டும், தங்கள் போக்கில் செல்லட்டும்; கிறிஸ்துவின் தாழ்மையோடும் சாந்தத்தோடும் தொடர்ந்து செல்லவேண்டியதுதான் உங்கள் வேலை. சுத்தமான இருதயமுள்ளவர்களாக, தேவனுடைய கரத்தில் சாய்ந்து முழு வல்லமையோடும் பெலத்தோடும், உறுதிகுலையாத நோக்கத்துடன் உங்கள் பணியைச் செய்யுங்கள். உங்கள் பணியின் மெய்யான, மேன்மையான தன்மையை நீங்கள் அறியாமல் இருக்கலாம். நீங்கள் எவ்வளவு முக்கியமானவர் என்பதை உங்களை இரட்சிக்கக் கொடுக்கப்பட்ட உயிரை வைத்துதான் அளக்கமுடியும்...

கிறிஸ்துவுக்குள் வளர்ச்சியடைகிற ஒவ்வோர் ஆத்துமாவுக்கும், நீண்ட, கடுமையான போராட்டக் காலங்கள் நேரிடும்; ஏனென்றால் செல்கிற பாதையில் தடைபண்ண அந்தகார வல்லமைகள் தீர்மானித்துள்ளன. ஆனால் நாம் கிருபைவேண்டி கிறிஸ்துவின் சிலுவையைப் பார்க்கும்போது, நாம் தோற்பதில்லை. 'நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை' 'இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்' என்று மீட்பர் வாக்குரைத்திருக்கிறார்."

---

### கலந்துரையாடக் கேள்விகள்

1. *பவுல் எப்போதுமே அநியாயமாகத்தான் பலமுறை சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார். நீங்கள் அநியாயமாக நடத்தப்படும்போது எவ்வாறு நடந்துகொள்கிறீர்கள்? அப்படிப்பட்ட நேரங்களில் உதவக்கூடிய வேதவாக்குறுதிகள் என்ன?*

2. *கிறிஸ்தவர்களின் உபத்திரவம்பற்றி, ஆதிகாலத் திருச்சபையின் தலைவரான டெர்டூலியன் இவ்வாறு சொன்னார்: 'நாங்கள் எவ்வளவு தூரம் உங்களால் அடக்கப்படுகிறோமோ அவ்வளவு தூரம் எண்ணிக்கையில் வளருகிறோம்; கிறிஸ்தவர்கள் சிந்துகிற இரத்தம் விதையாகும்.' அதேநேரம், உபத்திரவமானது சில இடங்களில், சில நேரங்களில் திருச்சபையின் பணிக்கு மிகப்பெரிய தடையாக இருந்தது. தங்கள் விசுவாசத்தின் நிமித்தம் உபத்திரவப்படுகிறவர்களுக்கு எந்தெந்த வழிகளில் உதவலாம்?*

3. *பவுல் அனுபவத்த கஷ்டங்களின் அடிப்படையில் இந்த வார மனன வசனத்தை வாசியுங்கள். 'எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்' என்று சொல்லுகிறார். அதன் அர்த்தம் என்ன? நாம் எவ்வாறு அதன்படி செய்யலாம்? உங்களுக்கு பிரியமான ஒருவர் வியாதியாக இருக்கலாம் அல்லது மரிக்கலாம். உங்களுக்கு வேலை போகலாம். பயங்கர சரீர வேதனையில் நீங்கள் இருக்கலாம். 'எதில் நான் எப்போதும் சந்தோஷமாய் இருக்கவேண்டும்?' என்கிற கேள்விக்கு பதில் தெரிந்தால்தான் இவற்றை அணுகமுடியும். நம் சூழ்நிலை எதுவாக இருந்தாலும், எதில் நாம் எப்போதும் சந்தோஷமாக இருக்கலாம்?*

# பதின்மூன்றாம் வார ஓய்வுநாளில் முதலீடு

**வானியா சூவ்**

ஒவ்வொரு காலாண்டு முடிவிலும், உதாரத்துவமாக காணிக்கை கொடுக்க விசுவாசிகள் கேட்டுக்கொள்ளப்படுவார்கள். அப்படியொரு சமயத்தில் ஆஸ்திரேலியப் பெண்மணி ஒருவர் பதின்மூன்றாம் வார ஊழியத்திட்டங்களை மீண்டும் ஒருமுறை பார்த்தார்.

மரிலின் ஸ்டீவன்சன் என்கிற அந்தப் பெண், ஓய்வுநாள் பள்ளியின் முதலீட்டு திட்டங்களுக்கு பணம் திரட்ட, திருச்சபை அங்கத்தினர்கள் கேக் செய்து விற்பதையும், காய்கறிகள் விளையச்செய்து விற்றதையும் பார்த்திருந்தார். அதேபோல தான் ஏதாவது செய்து, பதின்மூன்றாம் வாரக் காணிக்கைக்கு பணம் கொடுக்கலாமா என்று யோசித்தார்.

கேக் செய்வது, காய்கறிகள் பயிரிடுவது போன்றவற்றைச் செய்ய அவருக்கு நேரமோ விருப்பமோ இல்லை. அவர் தொண்டை தொற்றுக்குப் பயன்படுகிற ஒரு மருந்தை உபயோகித்து வந்தார், அது நன்றாக இருப்பதாக மற்றவர்களிடமும் பரிந்துரைத்தார். அதை வாங்க மற்றவர்கள் ஆர்வம்காட்டினபோது, அதை மொத்தவிலையில் வாங்கி, விற்கத் தீர்மானித்தார். அதில் கிடைக்கிற லாபத்தை நேராகம பதின்மூன்றாம் வார ஓய்வுநாள் காணிக்கையில் சேர்க்க விரும்பினார்.

இவ்வாறு தொண்டை மருந்தில் அவர் முதலீடு செய்தபிறகு, ஊழியத்திற்கு பணம் திரட்ட வேறு பல வழிகளிலும் முயற்சிகள் எடுக்கத் தூண்டியது.

“முதலில் என் பயன்பாட்டிற்கு வாங்க ஆரம்பித்த பொருட்களை, மற்றவர்களும் வாங்க விரும்பினதை அறிந்தேன். ஆனால் போய் வாங்குவதற்குத்தான் அவர்களுக்கு நேரமில்லை” என்று சொன்னார்.

உள்ளூர் விற்பனையகங்கள் மற்றும் தயாரிப்பு நிறுவனங்களைத் தொடர்புகொண்டு, மொத்த விலையில் ஆரோக்கியப் பொருட்களை வாங்கினார். பிறகு குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் சில்லறை வியாபாரத்தைவிட குறைந்த விலையில் விற்றார். பழங்கள், சோயாத்தயிர், சிறப்பு வேகன் உணவுகள் போன்றவை அதில் அடங்கும். மேலும், அன்னையர் தினம் போன்ற விசேஷித்த நாட்களுக்கான பூங்கொத்துக்களையும் தயாரித்து விற்றார்.

“அது பரவச அனுபவமாக இருந்தது. ஒரு பக்கம் பொருட்களை வாங்குகிறவர்களுக்கு நன்மை, இன்னொரு பக்கம் நல்லதொரு நோக்கத்திற்காக பணம் புரட்ட முடிந்தது” என்று சொன்னார்.

அந்தத் தொழிலில் முதலீடு செய்ய ஆரம்பித்த பிறகு மரிலனால் ஒவ்வொரு காலாண்டும் பதின்மூன்றாம் வார ஓய்வுநாள் ஊழியத்திட்டங்களுக்காக 300–600 ஆஸ்திரேலிய டாலர்களை (200–400 அமெரிக்க டாலர்) புரட்ட முடிந்தது.

பதின்மூன்றாம் வார ஓய்வுநாள் திட்டங்களுக்கு உதாரத்துவமாகக் கொடுக்கும்படி திருச்சபையின் அனைத்து அங்கத்தினர்களையும் ஊக்குவிக்கிறார்.

“சிறிய அளவு காணிக்கைக்காக நான் செய்கிறதைவிட மற்றவர்கள் வேறு ஏதாவது செய்ய இது அவர்களை ஊக்குவிக்கும். தேவனுடைய மிகப்பெரிய உண்மைதன்மையை நான் அனுபவிக்கும்படியான ஓர் அனுபவத்தை தேவன் கொடுத்திருக்கிறார். அதை நான் எவ்வாறு பகிராமல் இருக்கமுடியும்?



இந்தக் காலாண்டின் பதின்மூன்றாம் வாரத் திட்டங்கள் தென் பசிஃபிக் டிவிஷனில் செய்யப்பட உள்ளன. அந்த டிவிஷனில்தான் மரிலின் வசிக்கிற ஆஸ்திரேலியாவும் உள்ளது. மார்ச் 28ம் தேதி உதாரத்துவமாகக் கொடுக்கத் தீர்மானிப்பதற்கு நன்றி.